## இதய சிறுதுளை சிகிச்சை

# மியாட் மருத்துவமனையில் செயல்விளக்க கருத்தரங்கம்

சென்னை, ஏப்.4: மிகவும் சிக்கலான இதய பாதிப்புகளுக்குக்கூட மார்பைத் திறக்காமல் இதயத்தில் சிறு துளை போட்டு நவீன முறையில் அறுவைச் சிகிச்சைகளைச் செய்வது குறித்த இரண்டு நாள் செயல் விளக்க கருத்தரங்கம் சென்னை மியாட் மருத்துவமனையில் சனிக்கிழமை (ஏப்ரல் 4) தொடங்கியது.

இது தொடர்பாக மியாட் மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இதய அறுவைச் சிகிச்சை துறையின் தலைவர் டாக்டர் வி.வி.பாஷி, மியாட் மருத்துவமனையின் இதய அறுவைச் சிகிச்சை நிபுணர் விஜித் கே. செரியன், ஜெர்மனியைச் சேர்ந்த நிகோலஸ் டால், மருத்துவமனையின் இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் ஆகியோர் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியதாவது:



மியாட் மருத்துவமனையில் நடைபெறும் இதய சிறு துளை நவீன சிகிச்சை செயல் விளக்க கருத்தரங்கில் பங்கேற்ற (இடமிருந்து) டாக்டர் விஜித் கே.செரியன், டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ், டாக்டர் நிகோலஸ் டால், மல்லிகா மோகன்தாஸ், டாக்டர் வி.வி.பாஷி, டாக்டர் பிருத்வி மோகன்தாஸ்.

இதய வால்வு பாதிப்பு உள்ளிட்ட சிக்கலானவற்றுக்கு வழக்கமாக மார்பின் எலும்புக் கூட்டை வெட்டிச் செய்யப்படும் திறந்த நிலை அறுவைச் சிகிச்சை முறையில் 700 மில்லி லிட்டர் ரத்த இழப்பு ஏற்படும். மார்பில் பெரிய அளவில் தழும்பு ஏற்படும். மேலும் மருத்துவமனையில் 10 நாள்கள் தங்க வேண்டியிருக்கும். ஆனால், மார்புப் பகுதியில் சிறு துளை போட்டு செய்யப்படும் இதய சிகிச்சையில் 200 மில்லி லிட்டர் மட்டுமே ரத்த இழப்பு ஏற்படும். பெரிய அளவில் தழும்பு ஏற்படாது. மருத்துவமனையிலிருந்து ஆறாவது நாள் வீடு திரும்பி விடலாம். ருமாட்டிக் காய்ச்சல் பாதிப்பின் விளைவாக இதய வால்வில் பிரச்னை ஏற்பட்டு குழந்தைகள் உள்பட இளைய தலைமுறையினர் பெருமளவில் பாதிக்கப்படுவதால், இத்தகைய நவீன சிகிச்சை முறை பாதிக்கப்படுவோருக்கு மிகவும் பலன் அளிக்கும்.

இத்தகைய நவீன சிகிச்சை அளிப்பதற்கு நவீன மருத்துவக் கருவிகள் உள்ளதால், மியாட் மருத்துவமனையில் இதுவரை 51 சிறு துள்ளை இதய நவீன சிகிச்சைகள் வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் செயல் விளக்க நவீன சிகிச்சை கருத்தரங்கம் மூலம் நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து வந்துள்ள 100-க்கும் மேற்பட்ட இதய அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் பலன் அடைய உள்ளனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.